**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C)**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, RANIPET**

Case No. **MC.No. 2/2025**

**Deposition of the witness of PW** - 1

**Name - Aishwarya**

**Father's Name - Murali**
**Husband's Name – Vivek Balaji**

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of April 2026.

**குறுக்கு விசாரணை**

1. எனக்கு தமிழ் தெரியும். எங்களது திருமணம் மேட்ரிமோனியல் சென்டர் மூலம் நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்றால் சரிதான். எங்கள் திருமணத்திற்கு என் பாட்டி தான் முயற்சி எடுத்து செய்தார் என்றால் சரிதான். நான் திருமண சமயத்தில் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தேன் என்றால் சரிதான்.

2. நான் அப்போது சாராவதி டென்டல் கல்லூரில் BDS இறுதி ஆண்டு படித்து கொண்டிருந்தேன். நான் கல்லூரியில் படிக்கும் சமயத்தில் முறையாக வகுப்புகளுக்கு செல்லாமல் பரிட்சை எழுதும் சமயத்தில் என்னுடைய அட்டனன்ஸ் போதுமான அளவில் இல்லாததால் அதற்கு மன்னிப்பு கோரி மனு கொடுத்து அதன் பெயரில் தான் நான் பரிட்டை எழுத அனுமதிக்கப்பட்டேன் என்றால் சரியல்ல.

3. நான் கல்லூரி விடுதியில் தங்கி படித்தேன் என்றால் சரிதான். நான் இரண்டாம் ஆண்டு கல்லூரி படிக்கும் சமயத்தில் கல்லூரி விடுதியில் இருந்து PG(Paid Guest) விடுதிக்கு சென்று விட்டேன் என்றால் சரியல்ல, நான் PG-க்கு சென்றது Internship செய்யும் போதுதான். அவ்வாறு நான் PG

விடுதிக்கு சென்றது என் பெற்றோருக்கு தெரியாமல் நானாக எடுத்த முடிவு என்றால் சரியல்ல, என் குடும்பத்திற்கு தெரிந்துதான் அவ்வாறு சென்றேன்.

4. நான் கல்லூரியில் படிக்கும்போது என் போன் நம்பர் 8105793202. அது ஏர்டெல் இணைப்பு ஆகும். அந்த போன் நம்பர் தற்போது என் பயன்பாட்டில் இல்லை என்றால் சரிதான். அவ்வாறு என் போன் நம்பரை மாற்றி மூன்று வருடங்கள் இருக்கும்.

5. எனக்கும் எதிர் மனுதாரருக்கும் திருமணம் ஆன புதிதில் என் போனை அவர் பார்த்தபோது அதில் நான் பலருடன் தனிப்பட்ட முறையில் பேசியது மற்றும் தகாத உறவு வைத்திக்கொண்டது குறித்து ஆடியோ மற்றும் வீடியோ ஆதாரங்கள் இருந்தது என்றால் சரியல்ல. அதனால் தான் நான் போன் நம்பரை மாற்றிவிட்டேன் என்றால் சரியல்ல.

6. எனக்கு சென்னையில் உள்ள ஷெரன் நடராஜ் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். அவர் எனக்கு கல்லூரி காலத்திலிருந்து பழக்கமானவர் என்றால் சரிதான். நான் அவருடன் ஊட்டி, பெங்களூர், மைசூர், மங்களூர் மற்றும் சென்னைக்கு சென்று வந்தேன் என்றால் சரியல்ல. அவர்தான் எனக்கு I phone மற்றும் வெஸ்பா ஸ்கூட்டர் வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல.

7. எனக்கு சென்னையை சேர்ந்த ராஜ் என்பவரை தெரியும் என்றாலும் சரியல்ல. ராஜ் என்பவரை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு ராஜ் என்பவரை எனக்கு தெரியும் என்றும், என் திருமண சமயத்தில் ராஜ் என்பவருடன் நெருக்கமான முறையில் தனிப்பட்ட போட்டோக்கள் எடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

8. நான் கல்லூரி விடுதியில் தங்கியிருந்த சமயத்தில் எனக்கு பல அன்பளிப்புகள் வரும் என்றால் சரியல்ல. எனக்கு ராகுல் என்பவரை

தெரியுமா என்றால் தெரியாது. ராகுல் கப்பலில் வேலை செய்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய இன்ஸ்ட்டாகிராம் அக்கௌண்டை பார்த்தால் நான் ராகுல் என்பவருடன் நட்பு வைத்திருந்த விவரம் தெரிய வரும் என்றால் சரியல்ல.

9. நான் என்னுடைய இன்ஸ்ட்டாகிராம் அக்கௌண்டை தற்போது நீதிமன்றத்தில் ஓபன் செய்து காட்ட தயாராக உள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு அதை ஓபன் செய்தால் என்னுடைய நடவடிக்கைகள் தெரியவரும் என்பதால் தான் நான் அதற்கு மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

10. அதேபோல், காஞ்சிபுரத்தில் வங்கியில் வேலை செய்யும் ஒருநபர் மற்றும் சென்னையை சேர்ந்த ஆகாஷ் என்பவரை தெரியுமா என்றால் ஆகாஷை தெரியும், ஆனால் காஞ்சிபுரத்தில் வங்கியில் வேலை செய்பவரை எனக்கு தெரியாது. ஆகாஷ் என்பவர் தான் நான் PG விடுதியில் தங்கியிருந்த போது எனக்கு போன் மற்றும் அன்பளிப்புகள் அனுப்புவார் என்றால் சரியல்ல.

11. ஆகாஷ் என்பவரின் E-mail ID என்னவென்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் ஆகாஷ் என்பவருடன் Hotstar account மூலம் தகவல் பரிமாற்றம் செய்து கொள்வேன் என்றால் அது தொலைக்காட்சி மூலம் Hotstar App வழியாக அவ்வாறு செய்வேன். அவ்வாறு நான் Hotstar App வழியாக தகவல் பரிமாற்றம் செய்யும்போது, எனக்கு மாதவிடாய் வரும் தேதிகளையும் அவருடன் பரிமாறிக்கொள்வேன் என்றால் சரியல்ல.

12. எனக்கு ஆதி என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. ஆதி என்பவர் எனக்கு பலமுறை போன் மூலமாக பணத்தை திரும்ப கொடுக்கும்படி மிரட்டல் விடுத்தார் என்றால் சரியல்ல. எனக்கு திருமணம் நடந்து ஒரு மாத காலத்தில் என் போனை பார்த்த சமயத்தில் மேற்படி

விவரங்கள் எதிர் மனுதாரருக்கு தெரிய வந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

13. 2023 ஆம் ஆண்டில் எனக்கு போலீஸ்காரர் ஒருவருடன் தொடர்பு இருந்தது என்றால் சரியல்ல, நான் அந்த சமயத்தில் ஒரு புகார் கொடுத்திருந்தேன், அந்த புகார் சம்மந்தமாக அவர் என்னிடம் பேசுவார். அந்த சமயத்தில் என்னிடம் ரெட்மி மொபைல் போன் இருந்தது என்றால் சரிதான். அவ்வாறு அந்த போனில் வாட்ஸ் ஏப் பார்க்கும் போது இந்த பரிமாற்றங்கள் எதிர் மனுதாரருக்கு தெரிய வந்தது என்றால் சரியல்ல.

14. நான் தீப்பு என்பவருடன் தொடர்பில் இருந்த விவரம் என் போன் பார்த்த சமயத்தில் எதிர் மனுதாரருக்கு தெரிய வந்தது என்றால் தவறு. நான் கல்லூரிக்கு சரியாக செல்லாத காரணத்தினால் கல்லூரி நிர்வாகத்திடம் எதிர் மனுமாரரை அழைத்து சென்று வராததற்கான காரணங்களை சொல்லுமாறு கேட்டுக்கொண்டேன் என்றால் சரியல்ல. அவ்வாறு கேட்டுகொண்டும் எதிர் மனுதாரர் என்னுடன் கல்லூரிக்கு வராத காரணத்தினால் நான் எதிர் மனுதாரரிடம் பேசாமலும், போன் தொடர்பு இல்லாமலும் மற்றும் எந்த தகவலும் தராமலும் இருந்து வந்தேன் என்றால் சரியல்ல.

15. இறுதியாக நான் எதிர் மனுதாரருக்கு " No Girl Could live with you” என்று மெசேஜ் அனுப்பிவிட்டு அதற்கு மேல் நான் எதிர் மனுதாரருடன் வாழ விருப்பவில்லை என்று தெரிவித்தேன் என்றால் சரியல்ல. நான் தொடர்பில் இருந்த நபர்களுடன் Zostel என்ற application மூலமாக வெளியூருக்கு செல்லும் சமயங்களில் அதற்கான தங்கும் வசதியை செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததால் எதிர் மனுதாரர் மிகவும் கவலை அடைந்த நிலையில் இருந்தார் என்றால் சரியல்ல.

16. நான் எதிர் மனுதாரரை ஒரு கணவர் என்ற முறையில் மதிக்கவும் இல்லை, அன்பும் காட்டவில்லை என்றால் சரியல்ல. நான் எதிர் மனுதாரருடன் அவரது வீட்டில் இருந்த சமயங்களில் வீட்டில் இருந்த பெரியவர்களுடன் ஒத்து போகவில்லை என்றும், வீட்டு வேலை மற்றும் சமையல் எதுவும் செய்யவில்லை என்றும், போன் மட்டும் தான் பார்த்து கொண்டிருப்பேன் என்றால் சரியல்ல, நான் வீட்டு வேலை மற்றும் சமையல் செய்து தான் வந்தேன்.

17. நான் மனுவில் எதிர் மனுதாரருக்கு வெண்குஷ்டம் நோய் இருப்பதாக சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல, திருமணத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு எதிர் மனுதாரர் தான் தனக்கு அவ்வாறு ஒரு நோய் இருப்பதாகவும், அதனால் தற்கொலை செய்து கொள்ள போவதாகவும் தெரிவித்தார், அதற்கு நான் திருமணத்திற்கு பிறகு அதற்கான சிகிச்சை எடுத்து கொள்ளலாம் என்று தான் அவரிடம் கூறினேன். நான் சொல்வது அனைத்தும் பொய் என்றும், திருமணத்திற்கு பிறகு என்னுடைய நடவடிக்கைகளை பார்த்து தான் எதிர் மனுதாரர் தற்கொலை செய்து கொள்ளும் அளவிற்கு தள்ளப்பட்டார் என்றால் சரியல்ல.

18. அதனால் தான் எதிர் மனுதாரர் என்னிடம் விவாகரத்து கோரி HMOP.No. 119/2024 என்ற வழக்கினை இராணிப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பிறகு என் அப்பா எதிர் மனுதாரரின் அப்பாவுடன் தெரிந்த புருஷோத்தமன் என்ற நபர் மூலமாக பேசி நான் செய்தது தவறுதான் என்றும், எதிர் மனுதாரர் தான் எனக்கு வாழ்க்கை கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார் என்றால் சரியல்ல. அவ்வாறு பேச்சு வார்த்தை நடந்தது உண்மைதான், ஆனால் நான் தவறு செய்ததாக ஒப்பு

கொள்ளவில்லை, பிரச்சனையை சுமூகமாக முடிப்பதற்காகத்தான் என் அப்பா அவரது அப்பாவிடம் பேசினார்.

19. நான் BDS படிப்பை மார்ச் 2024-ல் முடித்தேன். அப்போதுதான் எனக்கு டிகிரி சர்டிபிகேட் வந்தது அதிலிருந்து நான் பிராக்டிஸ் செய்ய ஆரம்பித்தேன் என்றால் சரியல்ல. நான் என் பாட்டியுடன் சென்னையில் இரண்டு வருடங்களாக வசித்து வருகிறேன். நான் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், ஆனாலும் இவ்வழக்கிற்காக அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

20. நான் BDS படிப்பை முடித்துள்ளதால் என்னால் மருத்துவராக பணிபுரிய முடியும் என்றும், தனியாக கிளினிக் வைத்து வருமானம் ஈட்ட முடியும் என்றால் சரிதான், ஆனால் அதற்கு கிளினிக் வைப்பதற்கு பணம் வேண்டும், மேலும் நான் MDS படித்து கொண்டிருப்பதால் மருத்துவராக பணிபுரியவில்லை. நான் இந்த மனுவில் MDS மேற்படிப்பு படித்து வருவதால் என்னால் மருத்துவராக வருமானம் ஈட்ட முடியாது என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

21. எனது அப்பா KGF BEML நிறுவனத்தில் பொது மேலாளராக பணிபுரிந்து வருகிறார். எனக்கு வீடு மற்றும் போதுமான வசதி உள்ளது என்றால் அவ்வாறு என்ன இருக்கிறது என்பது குறித்து எனக்கு தெரியாது. எனது அப்பாவின் சொத்து சுமார் 20 கோடிக்கு மேல் உள்ளது என்றால் சரியல்ல.

22. இந்த வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் என் வருமானம் மற்றும் எதிர் மனுதாரரின் வருமானம் மற்றும் சொத்துகள் குறித்து அபிடவிட் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. நான் அந்த அபிடவிட்டை தாக்கல் செய்தால் என் வருமானம் மற்றும் சொத்துகள் குறித்த விவரங்கள் தெரியவரும் என்றால் சரிதான். அவ்வாறு என்

வருமானத்தை மறைப்பதற்காகத்தான் நான் அபிடவிட் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

23. நான் இந்த மனுவில் எதிர் மனுதாரர் ரூபாய் ஐந்து லட்சம் மாத வருமானம் பெறுவதாக சொல்லியுள்ளேன் என்றும், ஆனால் அதுகுறித்து ஆவண ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு எதிர் மனுதாரருடன் வாழ விருப்பம் இல்லை என்பதால் தான் நான் தனித்து வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல.

24. நான் மனுவில் எதிர் மனுதாரரின் பெற்றோர் என்னை வீட்டை விட்டு அனுப்பிய சமயத்தில் என்னுடைய பைகள் மற்றும் உடமானங்களை தூக்கி எரிந்ததாக சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. நான் எதிர் மனுதாரருடன் ஒரு உண்மையான வாழ்க்கையை வாழவில்லை என்றால் சரியல்ல. நான் திருமணத்திற்கு பிறகும் என் நண்பர்களுடன் தவறான உறவில் தொடர்ந்து இருந்து வந்ததால் எதிர் மனுதாரரிடம் ஜுவனாம்சம் கோரும் உரிமை எனக்கு இல்லை என்றால் சரியல்ல. மேலும், எனக்கு சம்பாதிக்கும் தகுதி இருந்தும் நான் வேண்டுமென்றே சம்பாதிக்காமல் உள்ளேன் என்றும், அதனால் எதிர் மனுதாரரிடம் நான் ஜுவனாம்சம் கோர முடியாது என்றால் சரியல்ல.

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/- A. Daoudh Ammal
Chief Judicial Magistrate,
Ranipet.